# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-17** **தேதி:-10.06.2010**

## சதிகளை முறியடிக்க திரண்டெழுவோம்.

09.06.2010 அன்று கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் AIBSNLEA சங்கத்தைச் சார்ந்த தோழர் சத்தியநாராயணா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. BSNL மற்றும் அதன் அதிகாரிகள்/ஊழியர்களை பாதிக்கும் பல் வேறு பிரச்சனைகளை முன்வைத்து ஏப்ரல் 20 அன்று துவங்கிய கால வரையற்ற வேலை நிறுத்தத்தை ஒட்டி BSNL CMD, DOT செயலர் மற்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் ஆகியோர் வழங்கிய உறுதிமொழிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக கூட்டு நடவடிக்கைக் குழு பரிசீலித்தது. அந்த பிரச்சனைகள் மீது BSNL நிர்வாகமும் DOTயும் கடைபிடிக்கும் உதாசீனப் போக்கின் மீது தனது ஆழ்ந்த அதிருப்தியினை அந்தக் கூட்டம் தெரிவித்தது.

### கருவிகளின் கொள்முதலும் தொடரும் சதிகளும்

BSNLக்கு கருவிகள் வாங்குவதை ஒரு சில சுயநல சக்திகள் தடுப்பதால் தான் நமது நிறுவனம் ஒரு இறங்குமுகத்தில் உள்ளது என்பது ஊரறிந்த உண்மை. BSNLல் ஏப்ரல் 20 ஆம் தேதி துவங்கிய கால வரையற்ற வேலை நிறுத்தத்திற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். பேச்சுவார்த்தையின் போது 10 மில்லியன் GSM இணைப்புகளுக்கான கருவிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு மத்திய அமைச்சர் உறுதிபட தெரிவித்தார். இந்த 10 மில்லியன் இணைப்புகள் கூட இந்த நிதியாண்டிற்கு மட்டுமே போதுமானது. அடுத்த நிதியாண்டில் மீண்டும் பற்றாக்குறை ஏற்படும். இதனை தவிர்க்க நிர்வாகம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் தற்போது 5.5 மில்லியன் கருவிகளுக்கான டெண்டரை மட்டுமே BSNL நிர்வாகம் வெளியிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இது தேவையினை விட மிகக் குறைவானது மட்டுமின்றி மத்திய அமைச்சரின் உறுதிமொழியை மீறும் செயலாகும். 93மில்லியன் கருவிகளுக்கான டெண்டரை ரத்து செய்வதற்கு வேகத்தை காட்டிய நிர்வாகம், போர்க்கால அடிப்படையில் கருவிகள் வாங்குவதில் காட்டவில்லை. இவ்வாறாக, BSNLக்கு கருவிகள் வழங்குவதை தடைசெய்து அதனை நலிவடையச் செய்யும் சதி என்பது தொடர்கிறது.

மேலும், எரிக்ஸன், நோக்கியா சீமென்ஸ் மற்றும் அல்காடெல் லூசென்ட் ஆகிய மூன்று நிறுவனங்கள் மட்டுமே BSNLன் 5.5 மில்லியன் டெண்டரில் போட்டியிட அனுமதிக்கப் பட்டன. BSNLன் CMDயே கூறியபடி குறைந்த விலையில் கருவிகள் வழங்கும் சீன நிறுவனங்களான ஹுவாய் மற்றும் ZTE ஆகியவை பாதுகாப்பு காரணங்களுக்காக டெண்டரில் போட்டியிட அனுமதிக்கப்பட வில்லை. மூன்று நிறுவனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் போட்டி குறையும்: எனவே இயற்கையாக விலையும் அதிகரிக்கும். BSNL தனது டெண்டரை இறுதி செய்த ஒரு சில தினங்களுக்குள், அரசாங்கம், ஒரு சில நிபந்தனைகளின் அடிப்படையில் சீன நிறுவனங்களிடமிருந்து கருவிகளை பெற்றுக்கொள்ளலாம் என தனது நிலையை மாற்றுகிறது. எனவே தனியார் நிறுவனங்கள் இந்த சீனக் கம்பெனிகளிடமிருந்து

கருவிகளை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் மூன்று மேற்கத்திய நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே BSNL நிறுவனம் கருவிகளை வாங்க வேண்டும் என்ற முடிவு தொடர்கிறது. BSNL நலன்களை காவு கொடுத்து, ஒரு சில மேற்கத்திய பன்னாட்டு கம்பெனிகல் பலன் அடைய வேண்டும் என அரசாங்கம் இந்த முடிவினை எடுத்துள்ளதா? BSNLஐ கொல்வதற்காக நடத்தப்படும் இந்த சதிகளை நாம் எவ்வளவு காலம் அனுமதிக்கப் போகிறோம்?

### ஸ்பெக்டரம் கட்டணத்தை தள்ளுபடி செய்

சமீபத்திய 3G ஸ்பெக்டரம் ஏலம் விட்டதின் அடிப்படையில், BSNL நிறுவனம், தனது உபரி நிதியிலிருந்து 10700 கோடி ரூபாய்களை ஸ்பெக்டரம் கட்டணமாக அரசாங்கத்திற்கு அவசர கதியில் கட்டியுள்ளது. அகலக் கற்றை கம்பியில்லா தொடர்பு (Broad band wireless access) கட்டணமாக ரூ10,000 கோடி ரூபாய்களை கட்ட வேண்டியுள்ளது. இந்தக் கட்டணங்களை செலுத்துவதன் மூலம் BSNL நிறுவனத்தின் உபரி நிதி மொத்தமாக துடைத்தெடுக்கப்படும். இது தனது விஸ்தரிப்பிற்கு பணம் இல்லாத நிலையினை BSNLக்கு உருவாக்கும். BSNLன் தற்போதைய நிதிநிலையை கணக்கில் கொண்டு அரசாங்கம் BSNL நிறுவனத்திற்கு ஸ்பெக்டரம் கட்டணத்தை தள்ளுபடி செய்ய வேண்டும். 3G ஸ்பெக்டரம் லைசென்ஸ் இருபது ஆண்டுகளுக்கானது என்பதால், குறைந்த பட்சம் ஒரு சில ஆண்டுகளாவது இதனை ஒத்தி வைக்கலாம்.

## 78.2% பஞ்சப்படி இணைப்பு

ஏப்ரல் 20 ஆம் தேதி நடைபெற்ற பேச்சு வார்த்தையில், இந்தப் பிரச்சனையில் எந்த விதமான பாரபட்சமும் காட்டப்படக் கூடாது என மாண்புமிகு மத்திய அமைச்சர் BSNL CMDயிடம் தெளிவாக தெரிவித்தார். 6ஆவது ஊதியக் குழு பரிந்துரைத்த அனைத்தையும் ITS அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் BSNLல் உள்ள அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் 78.2% பஞ்சப்படி இணைக்கப்பட வேண்டும் என DPE வழங்கிய உத்தரவை மட்டும் அமுலாக்க தொடர்ந்து BSNL நிர்வாகம் மறுத்து வருகிறது. BSNL CMD மற்றும் DOT செயலர் ஆகியோருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் எந்த பலனையும் தரவில்லை. இந்த தேக்க நிலை தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது.

### அரசு/பொதுத்துறை நிறுவனங்கள் BSNL இணைப்புகளை பெற வேண்டும்

ஏர் இந்தியா நிறுவனம், முழுக்க அரசுக்கு சொந்தமான நிறுவனமாக இருப்பதால், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் அதில் தான் பயணம் செய்ய வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. BSNLம் அரசுக்கு சொந்தமான நிறுவனம் தான். மத்திய மாநில அரசுகள், அவற்றிற்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள் அனைத்தும், அவற்றின் தரைவழி இணைப்பு, மொபைல்கள் மற்றும் அகலக் கற்றை சேவைகள் அனைத்தும் BSNLல் மட்டுமே பெற வேண்டும் என ஏன் மத்திய அரசு உத்தரவிடக்கூடாது. இந்த நியாயமான கோரிக்கைகளை முன்வைக்க பொறுத்தமான நேரம் வந்துள்ளதாக கூட்டு நடவடிக்கைக் குழு கருதுகிறது.

### இதர பிரச்சனைகள்

கால வரையற்ற வேலை நிறுத்தத்தின் சமயத்தில், கூட்டு நடவடிக்கைக் குழு இன்னும் பல கோரிக்கைகளையும் முன் வைத்தது. ITS அதிகாரிகளின் இணைப்பு, 01.01.2007க்கு முன் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய மாற்றம் ஆகியவை மிக முக்கியமானவை. மாண்புமிகு மத்திய அமைச்சரின் உறுதிமொழிகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அமுலாக்கப்பட வேண்டும்.

எனவே கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து உடனடியாக இரண்டு கட்ட இயக்கங்களை நடத்த கூட்டு போராட்டக் குழு முடிவு செய்துள்ளது.

# கோரிக்கைகள்

01.பத்து மில்லியன் கருவிகள் வாங்கப்படும் என உறுதி கூறப்பட்டதை உடனடியாக அமுல் படுத்து.
02.BSNL நிறுவனத்திற்கு 3G மற்றும் அகலக் கற்றை கம்பியில்லா தொடர்பிற்கான (BWA) ஸ்பெக்ட்ரம் கட்டணத்தை தள்ளுபடி செய்.
03.01.01.2007 முதல் 78.2% பஞ்சப்படி இணைப்பினை வழங்கு.
04.எந்த விதமான பாரபட்சமுமின்றி 01.01.2007க்கு முன் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை மாற்றி அமை.
05.ITS அதிகாரிகளை BSNLல் இணைக்கும் பிரச்சனையை முடிவு செய்.
06.BSNL/MTNL நிறுவனங்களிடமிருந்து மட்டுமே அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் தொலைத் தொடர்பு சேவை பெறவேண்டும் என வழிகாட்டு.

# இயக்கங்கள்

- **14.06.2010 அன்று உணவு இடைவேளை ஆர்ப்பட்டங்கள்.**
- **16.06.2010 அன்று மாவட்ட, மாநில, அகில இந்திய மட்டத்தில் பெருந்திரள் தர்ணா.**

BSNL நிர்வாகத்தின் அலட்சியப் போக்கையும், BSNLஐ சீர்குலைக்க முயலும் சுய நல சக்திகளையும் நாம் அனுமதிக்க முடியாது. BSNLஐ காப்பது நமது கடமை. நாம் பணியாற்றும் நிறுவனத்தை பாதுகாக்க உடனடியாக களம் காண்போம். BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகளையும், ஊழியர்களையும் சந்தித்து அரசு மற்றும் நிர்வாகத்தின் நிலைபாடுகளை விளக்கிச் சொல்லி அனைவரையும் ஒன்று திரட்டி கூட்டு போராட்டக்குழுவின் போராட்டங்களை வெற்றி பெறச் செய்வோம். BSNLக்கு எதிராக நடைபெறும் சதிகளை எல்லாம் நாம் நமது கூட்டு போராட்டங்களின் மூலம் எதிர்த்து போராடி வெற்றி பெற்று வருகிறோம். இம்முறையும் நமது வலிமையை அரசுக்கும் நிர்வாகத்திற்கும் எடுத்துக் காட்டுவோம். BSNLஐ பாதுகாக்கும் போராட்டங்களில் ஊழியர்கள்/ அதிகாரிகள் அனைவரும் எந்த விதமான பாகுபாடுமின்றி ஒன்றுபட்டு நிற்கின்றோம் என்பதை மீண்டும் நிரூபிப்போம். கோரிக்கைகளை முழுமையாக வெற்றி பெறுவோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**M.முருகையா.**
**மாநில செயலர்(பொறுப்பு).**